www.tamilarangam.net


# கறுப்பு

தேசத்தைக் காக்கும் கரும்படை

**கறுப்பு 041**

**06 ஒக்டோபர் 2010**

தொடர்புகளுக்கு
karuppu.edit@gmail.com


## நாடுகடந்த அரசாங்கத்திலிருந்து உருத்திரகுமாரன் வெளியேற்றம்! புதுப்பொலிவுடன் விரைவில் புதிய அரசாங்கம்!



கே.பியின் நெறிப்படுத்தலில் சிங்கள அரசின் நிகழ்ச்சித் திட்டத்திற்கு புலம்பெயர்தேசங்களில் செயல்வடிவம் கொடுக்க முற்படும் நரிகேசி உருத்திரகு மாரனை நாடுகடந்த அரசாங்கத்தில் இருந்து நிரந்தரமாக வெளியேற்றுவதற்கு அதன் அங்கத்தவர்கள் ஏகமனதாக முடிவு செய்திருப்பதாக தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. தேசத்துரோ கம், வாக்குமோசடி, நிதிமோசடி என நரிகேசி உருத்திரகுமாரனுக்கு எதிராகப் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக் கப்பட்டிருந்த நிலையில், இது தொடர் பாக தமக்குக் கிடைக்கப்பெற்ற ஆதா ரங்களை இவ்வாரம் ஆய்வுக்கு உட்ப டுத்திய நாடுகடந்த அரசாங்கத்தின் உறு ப்பினர்கள், நரிகேசி உருத்திரகுமார னையும், அவரது சகபாடிகளான கே.பி குழுவை சேர்ந்த ஏனையோரையும் நாடு கடந்த அரசாங்கத்தை விட்டு நிரந்தர மாக வெளியேற்றுவதற்கு தீர்மானித் துள்ளனர்.

குறிப்பாக கே.பி குழுவினரின் உதவியுடன் நாடுகடந்த அரசாங்கத் தின் பிரதமராக கடந்த வார இறுதியில் தன்னைத் தானே நரிகேசி உருத்திரகு மாரன் பிரகடனம் செய்து கொண்ட நிலையில், அவரும் அவரது சகபாடி களான கே.பி குழுவினரும் தொடர்ந்தும் நாடுகடந்த அரசாங்கத்தில் அங்கம் வகிப்பதற்கு தகுதியற்றவர்கள் என்று நாடுகடந்த அரசாங்கத்தின் ஏனைய உறுப்பினர்கள் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர்.

இதன்படி விரைவில் ஒவ்வொரு நாடுகளிலும் இயங்கும் தமிழீழ மக்கள வைகளின் உறுப்பினர்களை உள்வாங்கி புதுப்பொலிவுடன் புதிய நாடுகடந்த அர சாங்கத்தை அமைப்பதற்கு அதன் உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர்.

இதற்கு பல்வேறு தமிழ்த் தேசிய அமைப்புக்களும் தமது ஆதரவைத் தெரிவித்திருப்பதோடு, புதிதாக அமை யப் போகும் நாடுகடந்த அரசாங்கத் திற்கு உறுதுணையாக செயற்படுவதற்கு உறுதியளித்திருப்பதாக தெரிய வருகின்றது.

## சிங்கள அரசுக்கு நிதி அனுப்புவதற்கு உருத்திரகுமாரன் திட்டம்! பூர்வாங்க ஏற்பாடுகளில் டொக்டர் புவி - காவாலி சேகர்!



கே.பியூடாக சிங்கள அரசுக்கு ஒரு இலட்சம் பவுண்களை அனுப்பி வைப்பதற்கு உருத்திரகுமாரன் நடவ டிக்கை எடுத்திருப்பது தொடர்பான திடுக்கிடும் ஒலிப்பதிவு ஒன்று கறுப்பிற்கு கிடைக்கப் பெற்றுள்ளது.

ஈஸ்ற்ஹாமிலிருந்த தேசிய சொத்தை விற்று ஐந்து இலட்சம் பவுண் களைத் திருடிய நரிகேசி உருத்திரகுமார னின் அடிதடி அமைச்சரான காவாலி உருத்திராபதி சேகர், இதில் ஒரு இலட் சம் பவுண்களை டொக்டர் புவி ஊடாக கே.பியிடம் அனுப்புவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளில் ஈடுபட்டுள்ளார்.

இது தொடர்பாக காவாலி சேக ருக்கும், டொக்டர் புவிக்கும் இடையில் நடைபெற்ற தொலைபேசி உரையாட லின் ஒலிப்பதிவு வடிவம், எமது ஊடகப் புலனாய்வாளர்களால் கைப்பற்றப்பட்டு, தற்பொழுது எமது ஆசிரியர் பீடத்திடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இத்துடன் உலகத் தமிழ் உறவுகளின் கவனத்திற்காக இவ் ஒலிப்பதிவை இணைத்துள்ளோம்.

இதனிடையே, இதற்கு முழு அளவில் ஒத்துழைப்பு வழங்குவதற்கும், மேலதிக நிதியை திரட்டிக் கொடுப்ப தற்கும், காகிதப்புலிகளின் தலைவர் இராமு.சுபன், இந்திய உளவாளிகளான வி(நாய்)யகம், கே.பி.ரெஜி ஆகியோர் உறுதியளித்திருப்பதாக தெரிய வரு கின்றது. இது தொடர்பான ஆதாரங்கள் விரைவில் வெளியிடப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

**"கறுப்பு - துரோகங்களின் கருவறுப்பு"**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கறுப்பிற்கு களங்கம் விளைவிக்க முற்படும் தேசத்துரோகிகள்

கறுப்பிற்கு களங்கும் விளைவிக்கும் நோக்கத்துடன் விசமத்தனமான பரப்புரைகளில் கே.பி குழுவினர் ஈடுபட்டு வருவது தொடர்பான தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இலண்டன் றயிஸ்லிப் பகுதியில் மகிழூர்த்தி திருத்தும் நிலையம் ஒன்றை நடத்தி வரும் சிவபூசம் சுகுமார் என்பவரும், ரொட்டன்ஹாம் பகுதியில் உள்ள தமிழர் வீட்டு வாடகைக் கழகத்தில் ஆதிக்கம் செலுத்தும் கே.பியின் உறவினரான உதயன் என்பவருமே இவ்வாறான அவதூறுகளில் ஈடுபடுவதாக தெரிய வருகின்றது. தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்கள் தொடர்பாக அவதூறான தகவல்களையும், செல்பேசிக் குறுந்தகவல்களையும் பரப்பி வரும் இவர்கள், தமது கட்டுப்பாட்டிலேயே கறுப்பு இதழ் இருப்பதாகவும் கூறுகின்றனர். இவர்களுக்கு உடந்தையாக தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்களின் போர்வையில் மூன்று நபர்கள் செயற்படுவதாக தெரிய வருகின்றது. இவ்வாறான அவதூறுகளை இவர்கள் உடனடியாக நிறுத்தத் தவறும் பட்சத்தில் இவர்களை மக்களிடம் அம்பலப்படுத்துவதற்கு தயங்க மாட்டோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் கனடாவில் இருந்து பலதரப்பட்ட பிரச்சனைகள் எமது கவனத்துக்கு வந்துள்ளது. சம்பந்தப்பட்டவர்கள் ஆதாரபூர்வமாக தேசிய விரோத செயற்பாடுகள் செய்வோரை அறியத் தரும் பட்சத்தில் நாம் அவற்றை பிரசுரிப்போம். கறுப்பு மின்னிதழ் ஒருபோதும் தமிழீழ தேசிய விரோத செயற்பாட்டுக்கு துணைநிற்காது. சில கிருமிகள் அவ்வாறு எதிர்பார்க்கின்றனர். இது தமது நேரத்தை விரையமாக்கும் செயல் என்பதை அவர்கள் உணரவேண்டும்.

மின்னிதழ் கிடைக்காத வாசகர்களுக்கு விரைவில் புதிய ஏற்பாட்டை வழங்குவோம்.

(ஆ.ர்)

# பெண்களை தாக்கும் காவாலி சேகர்

கடந்த வாரம் இலண்டனில் நடைபெற்ற நாடுகடந்த அரசாங்கத்திற்கான கூட்டத்தில் கலந்து கொண்ட பெண் உறுப்பினராக வாசுகி என்பவரை தாக்குவதற்கு காவாலி சேகர் எடுத்த முயற்சி தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்களால் முறியடிக்கப்பட்டுள்ளது.

நாடுகடந்த அரசாங்கத்தின் பிரதமராகத் தன்னைத் தானே நரிகேசி உருத்திரகுமாரன் பிரகடனம் செய்வதை ஆட்சேபித்த பொழுதே வாசுகி அவர்களைத் தாக்குவதற்கு நரிகேசியின் அடிதடி அமைச்சரான காவாலி சேகர் முற்பட்டதாக தெரிய வருகின்றது.

எனினும் இதற்கு இடம்கொடுக்க மறுத்த ஏனைய தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்கள், காவாலி சேகரைக் கடுமையாக எச்சரித்துப் பின்தள்ளியுள்ளனர்.

# பதவிக்காக அலையும் நரிகேசியின் எடுபிடிகள்

மக்களின் பணத்தில் நாடுகடந்த அரசாங்கத்திற்கான தேர்தலில் போட்டியிட்டு, தமிழ்த் தேசிய உணர்வாளர்களின் உதவியுடன் வெற்றிபெற்ற நாடு கடந்த அரசாங்கத்தின் உறுப்பினர்கள் சிலர், பதவிக்காக நரிகேசி உருத்திரகுமாரனின் பின்னால் அலைந்து திரிவது தொடர்பாக தகவல்கள் கிடைத்துள்ளன. இதில் குறிப்பாக இலண்டனில் மக்களின் பணத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்ற மூவர் பதவிக்காக உருத்திரகுமாரனின் பின்னால் அலைந்து திரிவதாக தெரிய வருகின்றது.

இவ்வாறான கீழ்த்தரமான வேலைகளில் ஈடுபடுவதை உடனடியாக நிறுத்தத் தவறும் பட்சத்தில் இவர்களை மக்களிடம் அம்பலப்படுத்துவதற்கு நாம் தயங்கப் போவதில்லை என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்